மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 68/2021

பெயர் – ராமுத்தாய் (பி.வா.சா.1)

நாள் – 31.01.2024

வாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Sc., B.Ed படித்துள்ளேன். எனது தங்கை ராமலட்சுமி Diploma in Teacher Training படித்துள்ளார் என்றால் சரிதான். எனது கணவர் அரசு போக்குவரத்து கலகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். எனது கணவர் அ.இ.அ.தி.மு.க அரசியல் கட்சியில் உள்ளார் என்றால் சரிதான். வாதி மற்றும் எனது தகப்பனாரான பூல்ராஜ்க்கு எழுத படிக்க தெரியாது என்றால் தெரியாது. கையெழுத்து மட்டும் செய்வார். வாதி ராஜாராம் எனது சகோதர் என்றால் சரிதான். எனது தகப்பனார் வாதியின் தாயாரான காளியம்மாளை தான் முறைபடி திருமணம் செய்திருந்தார் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு செட்டுடையான்பட்டி, சுந்தரகுடும்பன்பட்டி, பிறவிபட்டி, கோல்வார்பட்டி மற்றும் அம்மாபட்டி ஆகிய கிராமங்களில் நஞ்சை, புஞ்சை நிலங்கள் நிறையாக உள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் வாதி பிறந்தவுடன் வாதி தாயாரை புறக்கணித்துவிட்டார் என்றால் சரியல்ல. முறைப்படி ஊரில் வைத்து விவாகரத்து செய்துவிட்டார். வாதியின் தகப்பனார் வாதியின் தாயாரை முறைப்படி விவாகரத்து செய்த விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. என்ன முறையில் விவாகரத்து செய்தார் என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆனால் சட்டப்படி அவர்களுக்கு விவாகரத்து ஆகவில்லை என்றால் சரிதான். ஆனால் ஊரில் வைத்து விவாகரத்து ஆனதாக ஊரில் உள்ளவர்கள் சொன்னார்கள். லட்சுமி பாட்டி, பேச்சியம்மாள் பாட்டி சொன்னார். லட்சுமி பாட்டி, பேச்சியம்மாள் பாட்டி ஊரில் வைத்து விவாகரத்து ஆனதாக சொன்னதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் மட்டுமே விவாகரத்து வழங்க முடியும் என்றால் சரிதான். ஆனால் அப்போது நீதிமன்றத்திற்கு செல்லும் வழக்கம் இல்லை. அப்போதும் நீதிமன்றங்களில் விவாகரத்து பெறும் வழக்கம் இருந்தது என்றாலும், வழக்கிற்காக அவ்வாறு நீதிமன்றங்கள் செல்லும் வழக்கம் இல்லை என நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அப்போது கிராமத்தில் இருப்பவர்கள்

விவாகரத்துக்காக நீதிமன்றம் வருவது வழக்கத்தில் இல்லை. ஊரில் விவாகரத்து பெறுவதை தீர்ந்துவிடுவது என்று சொல்லுவார்கள். எங்கள் சமுதாயத்தில் ஊர் குடும்பன் முன்பாகதான் திருமணம் நிச்சயதார்த்தம், திருமணம் மற்றும் தீர்ந்துவிடுவதல் நடைபெறும் என்றால் சரிதான். ஊர் பெரியவர்களும் இருப்பார்கள். எனது தகப்பனார் மற்றும் காளியம்மாளுக்கு எந்த ஊர் பெரியவர்கள் மற்றும் ஊர் குடும்பன் முன்னிலையில் தீர்ந்துவிடுதல் நடைபெற்று என்று வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ஏனெனில் அவர்கள் தற்போது உயிருடன் இல்லை. உண்மையிலேயே விவாகரத்து நடைபெற்றிருந்தால் ஊர் குடும்பன் மற்றும் ஊர் பெரியவர்கள் பெயரை சொல்லியிருப்பேன் என்றாலும், இல்லாத காரணத்தினால் தான் அவர்கள் பெயரை சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் உயிருடன் இல்லாத காரணத்தினால் தான் சொல்லவில்லை. யார் முன்னிலையில் விவாகரத்து நடந்தது என எனது தாயரை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் விவாகரத்து ஆனபோது எனது தாயார் இல்லாத காரணத்தினால் நாங்கள் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. நாங்கள் இப்போது கேட்ட போது எனது தாயார் அந்த விபரம் தெரியாது என்று சொல்லிவிட்டார். எனது தகப்பனார் எனது தாயாரிடம் யார் முன்னிலையில் விவாகரத்து ஆனது என்ற விபரத்தை சொல்லியிருப்பார் என்றாலும் நான் தான் வழக்கிற்காக எனது தாயார் தெரியவில்லை என்று சொன்னதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் தான் எங்களை படிக்க வைத்து நல்லமுறையில் திருமணம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். எனது அண்ணனான வாதியையும் எனது தகப்பனார் தான் M.Sc., M.Ed படிக்க வைத்தார். அவருக்கு இரண்டு குழந்தைகள் பிறக்கும் வரை வாதி எங்களுடன் தான் இருந்தார். எங்கள் சமுதாய வழக்கப்படி எவ்வாறு விவாகரத்து ஆனது என்ற விபரத்தை எதிர்வழக்குரையிலே, நிரூபண உறுதிக்கூற்றிலே சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எங்கள் சமுதாயத்தில் அவ்வாறு வழக்கமே இல்லாத காரணத்தினால் தான் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாதியின் தாயார் காளியம்மாள் எனது தகப்பனாரை விட்டு பிரிந்து பிறவிப்பட்டியை சேர்ந்த கருப்பணன் குமாரர் பாலகிருஷ்ணன் என்பவரையும், அதற்கு பிறகு செட்டுடையான்பட்டி கிராமத்தை சேர்ந்த மாயிருளன் குமாரர் கிருஷ்ணசாமி என்பவரையும் திருமணம் செய்து பின்னர் அவர்களை தீர்ந்துவிட்டதாக நான்

வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரை தீர்ந்துபோகாமல் வேறு ஒருவரை திருமணம் செய்ய முடியுமா. எங்கள் சமுதாயத்தில் ஒரு மனைவி இருக்கும் போது வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்யும் வழக்கம் உண்டா என்றால் உண்டு. ஆனால் எனது தகப்பனாரின் முதல் மனைவி வாதி மூன்று மாதம் கைகுழந்தையாக இருந்தபோதே வாதியைவிட்டு விட்டு வேறு திருமணம் செய்து கொண்டார். வாதியின் தாயார் வேறு திருமணம் முடித்த பிறகு தான் விவசாயம் செய்து வந்த எனது தகப்பனார் குழந்தையாக இருந்த வாதியை வளர்ப்பதற்காக தான் எனது தகப்பனார் எனது தாயாரை திருமணம் செய்தார். எனது தாயார் தான் வாதியை வளர்த்து M.Sc., M.Ed., வரை படிக்க வைத்தார். ஒரு மனைவி இருக்கும் போது மற்றொரு மனைவியை திருமணம் செய்யும் வழக்கம் எங்கள் சமுதாயத்தில் உண்டா என்ற விபரத்தை எங்கள் ஊர் குடும்பனை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். எங்கள் வழக்கில் எங்கள் ஊர் குடும்பனை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். வாதியின் தகப்பனாருக்குரிய சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்பதற்காக எனது தகப்பனாரை எனது தாயார் மதிமயக்கி ஆசை நாயகியாக இருந்து வந்தார் என்றால் சரியல்ல. அப்படியிருந்தால் வாதியை மூன்று மாதத்திலிருந்து எனது தாயார் வளர்த்திருக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது. எனது தகப்பனார் எனது தாயார் எப்போது எங்கு வைத்து யார் முன்னிலையில் திருமணம் நடந்தது என்ற விபரத்தை நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி விபரத்தை எனது நிரூபண உறுதிக்கூற்றில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான், எனது தாயார், தங்கை சொல்லி தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தாயார் ராஜாம்மாளுக்கும் எனது தகப்பனாருக்கும் சட்டப்படியான திருமணம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. குடும்பன் முன்பாக திருணம் நடைபெற்றது. குடும்பன் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது என்று நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன எனது தகப்பனாருக்கு எனது தாயார் சட்டப்படியான வாரிசு ஆகமாட்டார் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழில் எனது தாயார் பெயர் தான் வாரிசாக உள்ளது. எனது தகப்பனார் இறக்கும் வரை எனது தாயார் தான் பார்த்துக் கொண்டார். இறப்பு சான்றிதழ் பட்டா மாற்றம் செய்வதற்காக மட்டுமே கொடுக்கப்பட்ட ஆவணமாகும்

என்றாலும், அதனை சட்டப்படியான வாரிசு சான்றிதழாக ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 2019ம் ஆண்டு கீழே விழுந்து சாத்தூர் செந்தில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றால் சரிதான். எனது தாயாரும், நாங்களும் எனது தகப்பனாரிடம் சொத்துக்களை எழுதிக்கொடுக்குமாறு தொந்தரவு செய்ததால் மனஉளைச்சலில் கீழே விழுந்தார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் கீழே விழுந்த பிறகு தான் நான் வன்னிமடையிலிருந்து வந்தேன். கீழே விழுந்த எனது தகப்பனாரை வாதி தான் மருத்துவமனையில் சேர்த்தார் என்றால் வாதியும் எனது சகோதரியும் தான் சேர்த்தார்கள். கீழே விழுந்த தகப்பனாரை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அவரை மருத்துவமனையில் சேர்த்த பிறகு நான் தான் பார்த்தேன். எனது தகப்பனாருக்கு இடது காலில் அறுவை சிகிச்சை செய்தார்கள் என்றால் சரியல்ல. வலது காலில் அறுவை சிகிச்சை செய்தார்கள். வாதி ரூ.2 லட்சம் செலவு செய்து அறுவை சிகிச்சை செய்தார் என்றால் சரியல்ல. நான் பசு மாட்டை விற்று எனது தாயார் எனது தகப்பனார் கையில் கொடுத்தை வாதியின் கையில் அவர் மூத்த மகன் என்ற அடிப்படையில் எனது தகப்பனார் கொடுத்து அந்த பணத்தை வாதியின் நண்பரான மருத்துவரிடம் கொடுத்தார். பசு மாட்டை விற்று மருத்துவம் பார்த்ததாக எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே பசு மாட்டை விற்று செலவு செய்திருந்தால் அதுபற்றி எதிர்வழக்குரையில் சொல்லியிருப்பேன் என்றாலும், இல்லாத காரணத்தினால் தான் சொல்லவில்லை என்றாலும், வாதி தான் அந்த பணத்தை செலவு செய்தார் என்றாலும் சரியல்ல. எனது தகப்பனாருக்கு அறுவை சிகிச்சை முடிந்த பிறகு சுந்தரகுடும்பன்பட்டியில் உள்ள எனது தகப்பனார் வீட்டிற்கு தூக்கி சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரை எனது அண்ணன் தான் சுந்தரகுடும்பன்பட்டிக்கு அழைத்து செல்ல சொல்லி நான் தான் அழைத்து சென்று மூன்று வருடங்களாக அவரை பார்த்து கொண்டேன். வாதி எப்போதுமே எனது தகப்பனாரை அழைத்து செல்ல சொல்லவில்லை என்றால் சரியல்ல. அழைத்து சென்ற நாங்கள் எனது தகப்பனாருக்கு உணவு, உடை மற்றும் சரியான மருத்துவம் பார்க்காமல் இருந்து வந்தோம் என்றால் சரியல்ல. எனது தங்கை சாத்தூரில் இருந்ததால் எனது தங்கையும் பார்க்கவில்லை, வாதியும் பார்க்கவில்லை நான் தான் பார்த்தேன். சொத்துக்களை எழுதி தரச்சொல்லி

நான் எனது தகப்பனாரை மனதளவில் கொடுமைபடுத்தினேன் என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் உள்ள மலர்வள்ளி என்பவர் எங்களுக்கும், வாதிக்கும் உறவினர் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் சொத்துக்களை எழுதி தராத காரணத்தினால் எனது தகப்பனாரை நாங்கள் 2020ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தனியாக விட்டுவிட்டு சென்றுவிட்டோம் என்றால் சரியல்ல. அவ்வாறு தனியாக விட்டு விட்டு சென்றதை எனது சித்தி மலர்வள்ளி வாதியிடம் சொல்லி வாதி வந்து மீண்டும் எனது தகப்பனாரை செந்தில் மருத்துவமனையில் சேர்த்தார் என்றால் சரியல்ல. வாதியும் எனது தங்கையும் தான் உடல்நிலை சரியில்லாத எனது தகப்பனாரை மருத்துவமனையில் சேர்த்தார்கள். இரண்டாவது முறையும் வாதி தான் மருத்துவ செலவு செய்தார் என்றால் சரியல்ல. அது எனது தகப்பனாரின் பணம் ஆகும். அந்த பணம் எனது தகப்பனாருக்கானது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குணமாகியிருந்த எனது தகப்பனாரை 27.01.2020ம் தேதி நாங்கள் மீண்டும் தூக்கி வந்துவிட்டோம் என்றால் சரியல்ல. வாதி தான் தூக்கி சென்றுவிட்டார். எனது தகப்பனாரை நாங்கள் தூக்கி சென்றதால் அம்மாபட்டி காவல் நிலையத்தில் எங்கள் மீது வாதி புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த விசாரணையில் எனது தகப்பனார் எனது தாயாருடன் இருக்க போவதாக சொல்லிவிட்டார். அந்த விசாரணையில் வாதி ராஜாராமனுடன் தான் இருக்க விருப்பபடுவதாக தெரிவித்தார் என்றாலும், எனது கணவர் தான் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி அந்த புகாரை நிர்த்துபோக செய்து எனது தகப்பனாரை எங்கள் வீட்டிற்கு தூக்கி சென்றுவிட்டோம் என்றால் சரியல்ல. 02.11.2010ல் எனது தகப்பனார் ஒரு உயிலை வாதிக்கு எழுதி வைத்தார் என்றாலும், அது அந்த உயில் ஆவணம் வா.சா.ஆ.12 என்றால் சரிதான். எனக்கு எனது தங்கைக்கும் தனி தனியாக எனது தகப்பனார் ஒரு உயில் எழுதி வைத்தார் என்றால் சரிதான். எனக்கு எழுதி வைத்த அந்த உயில் ஆவணம் தான் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.15 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் எனது தங்கைக்கு எழுதி வைத்த உயில் ஆவணம் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.16 ஆகும். எனது தகப்பனார் வாதி, எனது தங்கை மற்றும் எனக்கு எழுதி வைத்த உயில் ஆவணங்களை ஒப்புக்கொண்டு தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். வாதிக்கு எழுதி கொடுத்த வா.சா.ஆ.12 ஆவணமான உயில் ஆவணத்தில்

உள்ள சொத்து தான் தபசில் சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.12, 15 மற்றும் 16 ல் உள்ள சொத்துக்களை நாங்கள் தனிதனியாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.